IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.3/2017
DEPOSITION OF WITNESS

<u>வா.சா.1 சாட்சி அருண்மொழி த.பெ.குண்டுமலை</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 17.02.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூல விபரம் தெரியும் என்றால் சரிதான். 2, 3 வாதிகள் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். வழக்கு விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து சுப்புலெட்சுமி பெயரில் இருப்பதற்கான ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சுப்புலெட்சுமியின் கணவர் வழி சொத்து என்றால் தெரியாது.

2. சுப்புலெட்சுமியின் கணவர் பெயர் தெரியாது. உயில் எங்கு வைத்து எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்பந்தமான உயில் ஆவணத்தை எனது அப்பா குண்டுமலை என்பவர் பெயருக்கு சுப்புலெட்சுமி மற்றும் மோகன் ஆகியோர்கள் எழுதிகொடுத்துள்ளார்கள். உயில் ஆவணத்தை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா சொல்லிதான் தெரியும். மேற்படி உயில் ஆவணத்தில் எத்தனை நபர்கள் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் ஒரு நபர்தான் கையெழுத்து செய்துள்ளார். அவர் பெயர் நடராஜன் ஆகும்.

3. மேற்படி உயிலில் குறிப்பிட்டுள்ள சுப்புலெட்சுமி, மோகன் ஆகியோர்களுக்கும் எங்களுக்கும் எந்த உறவும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள்

என்றால் சரிதான். நான் பிறந்ததிலிருந்து நிரூபண வாக்குமூலத்தில் உள்ள எனது முகவரியில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி முகவரியில்தான் எனது பெற்றோர்களும் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். 2, 3 வாதிகளான எனது சகோதர்களும் எனது வீட்டின் அருகில்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

4. நாங்கள் குடியிருந்து வரும் வீடானது திருமங்கலம்–விருதுநகர் பிரதான சாலையில் தெற்கு தெரு பேருந்து நிறுத்தத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடியிருந்து வரும் வீடு அதன் அருகிலேயே தாவா உயில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் மேற்படி ரோட்டின் கீழ்புறமாக உள்ளது என்றால் சரிதான். உயில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

5. உயில் சம்பந்தப்பட்ட சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. உயில் சொத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது. உயில் சொத்தில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காலி இடங்கள் குறித்த விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது, ஓட்டு வீடு ஒன்று உள்ளது. மேற்படி உயில் சொத்தில் உள்ள ஓட்டு வீடானது பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளதா என்றால் இடிந்து, சிதலமடைந்துள்ளது. மேற்படி இடத்தில்தான் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து காரவீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

6. மேற்படி ஆக்கிரமித்து கட்டியுள்ள பிரதிவாதிகளின் வீட்டின் கதவு எண்ணோ, தாவா வழக்கு குறிப்பிட்டுள்ள சொத்தின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வீட்டின் மின் இணைப்பு உள்ளதா அதற்கு வரி எதுவும் செலுத்தி வருகிறார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாவா உயில் சம்பந்தப்பட்ட சொத்தினை நான் நேரடியாக

சென்று பார்த்ததில்லை என்றால் சரிதான். தாவா பிராதில் உள்ள சொத்து விபரத்தில் எத்தனை இலக்க சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் எனது அப்பாக்குதான் தெரியும். எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1, 2 ல் உள்ள அசல் வழக்கின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி மோகன் என்பவரின் மனைவி என்றாலும் சுப்புலெட்சுமியின் மருமகன் என்றாலும் சரிதான்.

7. மோகன் சுப்புலெட்சுமிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 1 பெண் குழந்தை, 2 ஆண் குழந்தைகளாகும். 2ம் பிரதிவாதி சங்கிதபிரியா என்பவர் 1ம் பிரதிவாதி மோகனின் மகள் என்றால் சரிதான். மேற்படி நபரின் மகன் கார்த்தி, தனபால் என்றால் சரிதான். மேற்படி நபர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 1, 2 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அசல் வழக்கு எண். 136/2002 ல் 2ம் பிரதிவாதி சங்கிதப்பிரியா வாதியாக உள்ளார் என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.17 11:15:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.